# திருமயிலை உலா இலக்கியத்தின் பெண் சித்திரிப்பு

**M.P. நாதன்**
**வழக்கறிஞர், தலைவர்**
**தமிழர் சபை**

**48**

மிருகங்கள் போல் மனிதன் வாழாமல் இருப்பதற்காக உருவாக்கப்பட்டவை மனிதனின் ஒழுக்க நியதிகள். நிலமகள், கலைமகள், மலைமகள், திருமகள் என்று கடவுளின் ஒரு பாதியாகப் பெண்மையைப் போற்றும் நம் நாட்டில் பெண்களைக் கொச்சைப் படுத்தலும் அவமானப்படுத்தலும் அதிமாக இருக்கின்றன. பெண்மையை வெறும் போகப் பொருளாகப் பார்க்கின்ற பார்வையை அன்றைய இலக்கியங்களிலிருந்து இன்றைய திரைப்படங்கள் வரை நாம் பார்க்க முடியும். பெண்களைப் பார்ப்பது இரசிப்பது தொடுவது எல்லாமே ஒரு பாலியல் உணர்வாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. புலவர்களில் சிலர் தங்களுடைய இலக்கியப் புலமையை விற்றுப் பிழைக்க தாங்கள் பாடும் தலைவனை நிறைவுபடுத்தத் தங்களின் மனவக்கிரங்களைப் பெண்களை இழிவுபடுத்தி ஆபாசமாகப்பாடுவதில் காட்டியிருக்கிறார்கள். சிற்றிலக்கியங்களில் ஒன்றான 'திருமயிலை உலா' இலக்கியத்தில் பெண்கள் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## உலா இலக்கியம்

தெய்வத்திற்கும் அரசருக்கும் சான்றோர்களுக்கும் உரியதாக இருந்த இலக்கியங்களைப் பாமரருக்கும் உரியதாகச் செய்த பெருமை உடையன சிற்றிலக்கியங்கள். சிற்றிலக்கியவகைகள் தொண்ணூற்று ஆறு என்பர். அவ்வகை இலக்கியங்களுள் ஒன்று உலா இலக்கியம்.

உலா பற்றிய குறிப்புத் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பியங்கள் தலைவன் உலா வந்ததைச்சுட்டுகின்றன. இதுவே கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு உலா எனும் தனிச் சிற்றிலக்கியமாக மாறியது. உலா என்பது இறைவனோ மன்னனோ, வள்ளலோ, அடியாரோ, யானை, தேர், குதிரை ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றில் ஏறிவலம் வருவதாகும். இவ்வுலாக் காட்சியை ஏழுவகைப் பருவ மகளிரும் கண்டு மயங்குவதாக கலிவெண்பாவில் பாடுவதாக அமைவது உலா இலக்கியமாகும். உலா இலக்கியங்களில் மகளிரின் காமமே மிகைபடக் கூறப்படுவதால் பெண்பாற் கைக்கிளை என்றும் இதனைக் கூறுவர்.

## உலா இலக்கியங்களில் பெண்கள்

பாட்டுடைத் தலைவனைக் கண்டு காமம் கொள்ளும் ஏழுவகை பருவமகளிரை முறையே பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்றும் பிரித்துப் பாடியுள்ளனர். “பொதுவாக மகளிர் உலகியலை அறியும் நிலை எய்தாத இளம்பருவம் பேதைப் பருவம்

என்றும் காம உணர்ச்சி ஒருவாறு அரும்பி அதனை உணர்ந்தும் உணராததுமான நிலையில் உள்ள பருவம் பெதும்பைப்பருவம் என்றும் அவ்வுணர்ச்சியை நன்கு எய்திய பருவம் மங்கைப்பருவம் என்றும் அவ்வுணர்ச்சியில் வரும்பருவம் மடந்தைப் பருவமென்றும் அவ்வுணர்ச்சியில் முதிர்ந்து இன்பத்தில் திளைக்கும் பருவம் அரிவைப்பருவம் என்றும் மகப்பேறு அடையும் பருவம் தெரிவைப் பருவம் என்றும் காம உணர்ச்சி தளர்வுறத் தோன்றும் பருவம் பேரிளம் பருவம் என்றும், ஒருவாறு பாகுபாடு செய்து கொள்வது பொருத்தமுடையது எனலாம் என்று டாக்டர் உ.வே.சா அவர்கள் கூறுகிறார் (உலா இலக்கிய வரலாறு பக்கம்.36)

உலா வரும் தலைவனோடு பலர் புடைசூழ்ந்து வர பசுமையான பூமாலையை அணிந்த மன்மதன் கரும்புவில்லை எடுத்துக்கொண்டு மாடவீதியில் புகுந்த உடன் தேவலோக மங்கையர்களும் இந்திரலோகப் பெண்களும் சந்திர உலகத்துப்பாவையரும் நாகலோகத்துப் பெண்களும் காந்தருவ கன்னிகளும் வைகுண்ட மங்கையர்களும் பூலோகப் பெண்களாக உருமாறி வந்தனர். இவர்களோடு பூலோகத்துப் பேதைப் பெண்களும் உலாத் தலைவனைக் கண்டு காமமுற்று தங்கள் நோய் நீங்க மருந்து ஏது என்று மதி மயங்கி நின்றனர். ஏழுலகத்துப் பெண்களும் உலாத் தலைவனைக்கண்டு மதி மயங்கி நின்றனர். ஆனால் உலாத்தலைவன் எந்த மகளிரிடத்தும் மயங்கமாட்டான். அதோடு பெண்களின் அறியாமையைக் கண்டு முறுவல் கொள்வான். பாட்டுடைத் தலைவனின் சிறப்பு எல்லா மகளிரும் தன்னைக் கண்டு காதல் கொள்ளும் வகையில் வீதியில் பவனிவரும் அழகுப்பாவையாகவே, உலா இலக்கியங்களில் சித்திரிக்கபட்டுள்ளன. உலா இலக்கியத்தில் சித்திரிக்கப்படும் ஒவ்வொரு பருவம் பெண்ணின் அழகும் பாலியியல் உணர்வோடு அவர்களை இழிவுபடுத்தும் தன்மையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்நிலை ஆண்களின் மேலாதிக்க மனநிலையினையும் பெண்களின் அடிமைத் தனத்தையும் நன்கு வெளிப்படுத்துகிறது.

**பேதைப்பெண்**

கடலில் உதயமான நிலவைப் போன்ற அழகு படைத்தல் பேதைப் பருவம் என்பது ஐந்து முதல் ஏழுவயதுவரை உள்ள பருவத்துப் பெண், ஆண் பெண்பருவ வேறுபாடு அறியாத தாய்ப்பால் குடித்தலை இன்னும் மறக்காதபருவம் இப்பேதைப் பெண்,

"தாயர் தொழுத் தெழுது தாயார் புகழப் புகழ்ந்து
ஆயும் மயிற்காயல் அரிவையரைத் - தாயரைப் பார்த்து (திருமயிலை உலா- பாடல் 267)

உலாத்தலைவன் மேல் ஆசைக்கொண்டு அவன் அருகில் தன்னை எடுத்து வைக்கும்படி கூறுகின்றாளாம். அத்தாயர் அடபேதைப் பெண்ணே! நீ இவ்வாறு ஆசை கொண்டாயே அந்த ஆசையைவிட்டு விடு என்று வருத்தத்தோடு உரைக்கின்றார்கள் இங்குச் சிறுவயதிலேயே பெண்ணின் மேல் சார்த்தப்படும் ஒடுக்குமுறையை நாம் காணமுடிகிறது. ஐந்து வயது குழந்தையின் மனத்தில் தான் பெண்ணாக இருக்கின்ற காரணத்தால் தான் விரும்பிய எதுவும் தனக்குக் கிடைக்காது என்ற ஒரு ஏமாற்ற மனநிலை ஊட்டப்படுகிறது.

**<u>பெதும்பைப் பருவம்.</u>**

மலர் மகளாகிய திருமகளின் பேர் அழகை எட்டிப்பிடிக்கும் பெதும்பைப் பருவம் என்பது எட்டுவயது முதல் பதினொருவயது வரை உள்ள பருவம் பெதும்பைப் பருவம்.

……. காம கலை

"காணவும் வஞ்சிக்கும் காட்சியாள் - நாண் அரும்பு
மெய்யினாள் மன்மதவேள் வேதம் ஓதக்கற்கும்
பொய்யினால் தாதளையும் போது அன்னாள் (திருமயிலை உலா - 279, 208)

கொலைத்தன்மையும் பிறரைக் கவருந்தன்மையும் சூது அரும்பிக் காமனை வெல்ல நினைக்கும் வழியே உடையவள் என்று வருணிக்கப்படுகிறாள். கழங்கு ஆடும் எட்டு வயதுக் குழந்தை உலாத்தலைவனைக் கண்டு காமமுற்று மெய்சிலிர்க்கக் கூந்தல் அவிழ மயங்கி நின்றாளாம். காம உணர்வினை அறியாத ஒரு குழந்தையிடம் இத்தனை உயர்வு வெளிப்பாடுகளை பெதும்பைப் பருவப் பெண்ணின் உணர்வுகளைச் சிறப்பாகப் பாடும் புலவனுக்குப் பெதும்மைப் புலி என்று பெயர் வேறு பெண்பாற் புலவர் ஔவையாரால் கொடுக்கப்படுகிறது.

**<u>மங்கைப்பருவம்</u>**

குளிர்ச்சியும் இனிய தேனும் தளும்பும் தாமரைமங்கைப்பருவம் பன்னிரெண்டு வயது முதல் பதின்மூன்று வயது வரை உள்ள பருவம். இம் மங்கைப் பருவத்துப் பெண்.

பூமகளைத் தன் எழிலால் பொற்பு அழித்துக் காமக்கலைக்
காமுகரை ஈடு அழிக்கக் காதல் செய்வாள் (திருமயிலை உலா -310)

எல்லோருடைய ஆசையும் படரும் கொம்பாக இருக்கும் தன்மை உடையவள், உலாத்தலைவனைக் கண்டு, காமமுற்று நிற்க. அவள்மேல் மன்மதன் பானங்களைச் சொரிய, காதல் நோய் தாங்காமல் மயங்கி, வீழ்ந்தாள்.

**<u>மடந்தைப்பருவம்</u>**

எழில் மடந்தையாகிய இம்மடந்தைப்பருவம் பதினான்கு வயது முதல் பத்தொன்பது வயது வரை உள்ள பருவம் இம்மடந்தைப் பெண் மாமுனிவர்கள் கைகட்டி வாய்ப்புதைத்து நிற்க உயரிய காமசாத்திரத்தைப் போதிக்கும் காமாசாரியாள் மன்மதனை ஏவும் கொள்ளும் முகத்தை உடையவள். ஆள்வேட்டை ஆடும் அழகும் திரண்ட அங்கங்களும் உடையவள் (திருமயிலை உலா பாடல் - 356, 364 என்று ஒரு போகப் பொருளாக உவமிக்கப்படுகிறாள்.

**<u>அரிவைப்பருவம்</u>**

உலகில் தோன்றிய பெண்களுக்கும் தோன்றப்போகும் பெண்களுக்கும் முன்மாதிரியாக பிரம்மனால் வகுக்கப்பட்ட அழகுடைய அரிவைப்பருவம் இருபது வயது முதல் இருபத்தைந்து வயது வரை உள்ள பருவம்,

"மாமுனிவர் கைகட்டி வாய்புதைத்து நிற்ப உயர் காமக்கலை போதிக்கும் காமகுரு
(திருமயிலை உலா, 415)

அழகில் சிறந்தவள், மன்மதனின் கேளிக்கை மண்டபத்தின் முன்னால் கட்டப்படும் வாழை

போன்றவள் என்று ஒரு கேளிக்கைப் பொருளாக அரிவைப் பருவத்துப் பெண்கள் சித்திரிக்கப்பட்டுள்ளாள்.

**தெரிவைப் பருவம்**

பேசும் தெரிவைப்பருவம் இருபத்தாறு முதல் முப்பத்தொரு வயது வரை உள்ள பருவம் "மன்மதனை வா என்று அழைத்து ஏவலிடும் கடல் போன்ற அகன்ற கண்னை உடையவள் உலகின் இளைஞர் மனத்திற்குடியிருக்கும் அங்கங்களை உடையவளாகிய (திருமயிலை உலா பாடல் 477-478) இத்தெரிவைப் பெண் இறைவனது திருத்தோள்களையும் மார்பையும் ஆசையுடன் நோக்கி மன்மதனின் கரும்புவில் படாதோ என்று மயங்க மன்மதனும் தன் மலர்ப் பானங்களை அவள் மேல் சொரிகின்றனாம். பெண் என்பவள் ஆடவர்களை அலைக்கழிக்கும் ஒருபோகப் பொருளாகச் சித்திரிக்கப்படுகிறாள்.

**ஆய்வு முடிவுகள்**

உடலியல் ரீதியான காம உணர்விற்குள் பெண்டிர் அமிழ்த்தப்பட்டு ஆடவனோடு சேருவதைத் தவிர பெண்ணுக்கு வேறு கதியில்லை என்பது போலவே சித்திரிக்கப்படுகிறாள். பெண்களை ஆண் தன் போகப் பொருளாக எப்படிப் பயன்படுத்தினாலும் தவறில்லை. பெண் தன்னைப் பல்வகையிலும் அழகுப்படுத்தி தன் உடல் என்ற ஆயுதத்தால் ஆடவனைப் பலவழிகளிலும் வசப்படுத்த நினைக்கிறாள் என்பன போன்ற பல கருத்தாக்கங்களை உலா இலக்கியங்கள் உருவாக்குகின்றன.

உலா இலக்கியங்கள் பொருட் சிறப்பும் அழகு நயமும் கற்பனைச் செறிவும் உடைய இலக்கியங்கள் என்றாலும் பெண்ணியநோக்கில் பார்க்கும்போது தேவையில்லாமல் பெண் உணர்வுகளைக் கொச்சைப்படுத்திய எல்லோருக்குரிய இயற்கை உணர்வுகளைப் பெண்ணிற்கு மட்டும் அதிகப்படியாகச் சித்திரிக்கின்ற இலக்கியங்களாகப் காணப்படுகின்றன.

**துணை நூல் பட்டியல்**

1.திருமயிலை உலா பாடல், உமா பதிப்பகம், சென்னை- 06.

2. தூது இலக்கியங்கள் (பதி) ; டாக்டர் உ.வே.சா.